# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை 10 வியாழக்கிழமை 23.01.2025 கதிர் 105







# நான் புலி உறுப்பினர் எனில் என்னைச் சுட்டு வீழ்த்துங்கள்

## நாடாளுமன்றில் அர்ச்சுனா மீண்டும் ஆவேசம்

## எதிரணியால் அவருக்கு அநீதி இழைப்பு என்று சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன 23

"என்னை இந்த அரசாங்கம் புலி, புலி என்று அடையாளப்படுத்துகின்றது. நான் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த ஒருவராக இருந்தால் என்னைக் கைது செய்யுங்கள் அல்லது கொலை செய்யுங்கள்." – என்று யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்றைய அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

7 ➤

## பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 2000 ரூபா தினசரி சம்பளம் அவசியம்

### சபையில் மனோ எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, ஜன 23

"2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச சேவையாளர்களின் சம்பளத்தை அதிகரித்தால் பெருந்தோட்ட

7 ➤

## ஆவரங்காலில் கோர விபத்து! இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!!

### மற்றொரு இளைஞர் படுகாயம்



யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணம், ஆவரங்கால் பகுதி யில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்

7 ➤




## புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறு இன்று வெளியீடு

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின்

7 ➤

## சாணக்கியனுக்கு ரூ. 50,000 வழங்குமாறு பிள்ளையானுக்கு நீதிமன்றம் உத்தரவு



மட்டக்களப்பு, ஜன. 23

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தன்னை அவமதித்துக் கருத்து வெளியிட்டார் எனக் குற்றஞ்சாட்டி முன்னாள் இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) கல்கிஸை மாவட்ட

6 ➤

## பாடசாலையில் வைத்து மாணவி துஷ்பிரயோகம்! பொலிஸாரிடம் சிக்கிய 52 வயதுடைய ஆசிரியர்!!

### யாழ். கோப்பாயில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் 14 வயது மாணவியைத் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில்

7 ➤

## வழங்கிய வாக்குறுதிகள் போலியானவை என்பதை நிரூபித்து வருகின்றது அநுர அரசு

### பிரதான எதிர்க்கட்சி சாடல்



கொழும்பு, ஜன. 23

வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் போலியானவை என்பதை ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசு தற்போது நிரூபித்து வருகின்றது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-

"அரிசி, தேங்காய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்குகே கையேந்தும் நிலையை இந்த அரசு உருவாக்கியுள்ளது.

7 ➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# இலங்கையில் திருமணத்திற்கு பொது வயதெல்லை

கொழும்பு, ஜன 23

இலங்கையில் திருமண வயது எல்லையை பொது வயது எல்லையாகக் கொண்டுவருவதற்கு நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத் தினால் முன்மொழிவு

"பிள்ளை" என்பதற்கு சரியான வரை விலக்கணம் வழங்குவது பற்றி பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

பாராளுமன்ற பெண் உறுப்பினர் களின் ஒன்றியம் அதன் தலைவர் கௌரவ அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் தலைமையில் நேற்று நாடா-ளுமன்றத்தில்த்தில் கூடியது. இக்கூட்டத் தில் ஒன்றியத்தின் பிரதி இணைத் தலைவர்களான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான சமிந்திரானி கிரிஎல்வே மற்றும் சமன்மலி குணசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்

பத்தாவது நாடாளுமன்றத்திற்கான பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின செயற்திட்டத்தை தயாரிப்பது குறித்து ஒன்றியத்தின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட



இந்தக் கூட்டத்தில் இலங்கையில் திருமண வயது எல்லையை திருத்துவது தொடர்பாக ஒன்றியத்தின் தலைவர் கௌரவ அமைச்சர் சரோஜா சாவித்ரி ஒன்றியத்தின் சுவனத திற்குக் கொண்டுவந்தார்.

இலங்கையில் தற்பொழுது காணப்படும் பல்வேறு திருமண சட்டங்களுக்கு அமைய காணப்படும் திருமண வயது எல் லையை பொது எல்லையாகக் கொண்டுவருவதற்குத் தேவையான திருத்தத்தை மேற்கொள்ள சிவில் சமூகம் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரின் முன்மொழி வுகளைப் பெற்றுக்கொள்வதற்கும், அதன் ஊடாக ஒன்றியத்தின் மூலம் இறுதிப் பரிந்துரையை வழங்குவதற்கும் இதன்போது முன்மொழியப்பட்டது.

அத்துடன், பிள்ளை என்பதை சரியான முறையில் வரைவிலக்கணம் செய்வ-தற்குத் தேவையான திருத்தங்களை மேற் கொள்வதற்கும் பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின்கவனம் செலுத்தப்பட்டது

அத்துடன், பெண்களின் மேம்பாடு மற்றும் வலுப்படுத்தல் தொடர்பில் ஒன் பதாவது நாடாளுமன்றத்தில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி விஜேரத்ன முன்வைத்த திருத்தப்பட வேண்டிய விடயங்கள் அடங்கிய சட்ட மூலத்தை மீண்டும் முன்வைக்கவும் இங்கு முன்மொழியப்பட்டது. அத்துடன், நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் கௌரவ சுதர்ஷினி பர்னாந்து புள்ளே முன்வைத்த தனிநபர் சட்டமூலந்துக்கான திருத்தங்களை மேலும் ஆராய்ந்து அதற்குப் புதிய முன் முன்மொழிவுகளை உள்வாங்கி மீண்டும் பாராளுமன்றத்துக்கு முன்வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அந்தத் திருத்தங்களுக்கு ஒன்றியத் தின் உறுப்பினர்களினதும் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை முன்வைக்குமாறும் ஒன்றியத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், பெண்களை வலுப்படுத் தும் நோக்கில் நாடாளுமன்ற பெண் உறுப்பி னர்களின் ஒன்றியத்தினால் மேற் கொள்ளக் அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்ள பத்தாவது பாராளுமன்றத்தில் நடவடிக்கை எடுப்பதாக ஒன்றியத்தின் தலைவர் இதன்போது தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களான தீப்தி வாசலகே, (சட்டத்தரணி) துஷாரி ஜய்சிங்ஹ ஒஷானி உமங்கா (கலாதிறீ) கௌஷல்யா ஆரியரத்ன, கிருஷ்ணன் கலைச்செல்வி, ஜசட்டத்தரணி) கிநா ஹேரத் (சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ (சட்டத்தரணி) அனுஸ்கா திலகரத்ன, (சட்டத்தரணி) சாகரிகா அதாவுத ம்.ஏ.சீ.எஸ். சத்துரிகங்கானி, நிலூஷா வசமானி கமகே ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே (சட்டத்தரணி) நிலந்தி கொட்டஹச்சி (சட்டத்தரணி) ஹசாரா வியனகே, அம்பிகா சாமிவெல் (சட்டத்தரணி) வக்மாலி ஹேமசந்திர ஆகியோர் கலந்துகொண்டனர. (ஐ)

# 2025 க்குள் 4350 புதிய வீடுகள்



கொழும்பு, ஜன 23

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் தோட்ட மக்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் 2025ம் ஆண்டிற்குள் 4350 வீடுகள் நிர்மாணிக்கப் படவுள்ளது அத்துடன் பெருந்தோட்ட மக் களின் உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து அவர்களை வறுமை நிலையில் இருந்து மீட்டெடுப்பது அரசாங்கத்தின் பிரதான நோக்கம் என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் தோட்ட மக்களுக் காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை தங்களது அரசியல் நட்பு வட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக் கப்பட்டிருந்தது எனவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இப் புதிய வீடுகள் தோட்டப் புறங்களில் வாழும் உரிய பயனாளிகளுக்கு மாத்திரம் வழங்கப்படும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

அரசாங்கத்தினால் குத்தகைக்கு விடப்பட்டுள்ள பெருந்தோட்ட நிறுவனங் களின் உயர் அதிகாரிகளுடன் பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு அமைச்சில் 21 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இதனை தெரிவித்திருந்தார்.

மேலும் குடிசன புள்ளி விபர மதிப்பீடுகளுக்கு அமைய 83.75% மானோர் இலங்கையில் சொந்த குடியிருப்புக்களில் வாழ்ந்து வருவதோடு அதில் 5.6% மானோர் தோட்ட புறங்களை சார்ந்தவர்களாவர்.

இது மிகவும் ஒரு குறைந்த எண்ணிக் கையாகும். இலங்கையில் வாழும் சமூக கட்டமைப்பின் படி வறுமையானோர் 11.9மூ ஆவார். அதிலும் பெருந்தோட்ட பகுதியில் 29.7% மானோர் வறுமை கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.

இதன் அடிப்படையில் தோட்டப் புறங்களில் வாழும் மக்களை வறுமையிலிருந்து மீட்டெ டுத்து அவர்களுக்கான வீட்டு பிரச் சினைக்கு விரைவான ஒரு தீர்வினை பெற்றுக் கொடுப்பது எமது தலையாய கடமையாகும் 10,000 இந்திய உதவி வீட்டுத் திட்டத்தின் கீழ் 1,300 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள தாகவும் 2025 ஆண்டு முடிவதற்குள் 4,350 வீடுகளும் 2026 வருடத்துக்குள் மேலும் 4,350 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டு தோட்ட மக்களுக்கு அவ் வீடுகள் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடலின் போது பெருநதோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன அவர்களும் தொழில் அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ அவர்களும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திர கீர்த்தி அரசாங்கத்தினால் குத்தகைக்கு வழங்கபட்டுள்ள பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளின் மேல் மட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# தூங்கும் பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஜன 23

பொலிஸார் சிலர், தங்களுடைய பணி நேர கடமையின் போது, தூங்கிக் கொண்டிருப்பதை போல, சமூக வலைத்தளங்களில் தற்போது வீடியோ பதிவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கடும் அவதான-த்தை செலுத்தியுள்ள பொலிஸ் மா அதிபர், அவை தொடர்பில், அந்த பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளிடம் தனது அதிருப்தியை தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசேட விசாரணை பிரிவின் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்க-ப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்துடன் தொடர புடைய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித் துள்ளது

# வெள்ளத்தில் மூழ்கிய 40 ஏக்கர் வயல் காணிகள்





வவுனியா, ஜன 23

வவுனியா மாவட்டத்தில் நிலவும் தொடர் மழை காரணமாக செட்டி-குளம், ஆண்டியாபுளியங்குளம், ராமையன்குளம் பகுதியில் சுமார் 40 ஏக்கர் வயல் காணிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக வவுனியா பாவற்குளம் குளத்தின் நான்கு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் அந்த நீர் வழிந்தோடும் பகுதியின் கீழுள்ள வயல் நிலங்களே இவ்வாறு பாதிப்படைந்துள்ளன.

மேலும் அறுவடைக்குத் தயாராக இருந்த நிலையில் நெற்பயிர்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

வெள்ள நீர் தொடர்ச்சியாகப் பயிர்களுக்கு மேலாக மூடிப் பாய்ந்து வருவதாகவும், இதனால் தமது விவசாயம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளதாகவும் விவசாயி-கள் தெரிவித்தனர்.

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு விரைவில் வரும்

கொழும்பு, ஜன 23

2024 ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளை விரைவில் வெளியிடுவதற்கு எதிர்பார்ப்பதாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இன்று (23) எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

புலமைப்பரிசில் பரீட்சையுடன் ஏற்பட்ட நெருக்கடி நிலைமை காரணமாக, பெறுபேறுகளின் மதிப்பீட்டை இடைநிறுத்த நீதிமன்றம் உத்தரவிட்டதால், பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

# பொலிஸ் ஆணைக்குழுவிற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பு



கொழும்பு, ஜன 23

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கும் இடையில் விசேட கலந்துரையாடல் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

பொலிஸாரின் சில இடமாற்றங்களைச் செய்வதற்கு பொலிஸ் ஆணைக்குழு தயக்கம் காட்டுவதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அண்மையில் பொதுக் கூட்டம் ஒன்றில் ஒரு குற்றச்சாட்டை முன்வைத்த நிலையில், அது தொடர்பிலும் பொலிஸ் ஆணைக்குழுவின் தற்போதைய செயற்பாடுகள் குறித்து அறிவுறுத்துவதும் இந்த கலந்துரையாடலின் நோக்கமாகும்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு தனது ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்து இதன்போது ஜனாதிபதிக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, தேசிய பொலிஸ் ஆணைக்குழு தனது கடமைகளை சட்டப்பூர்வமாக மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

பொலிஸ் ஆணைக்குழு சுயாதீனமாகச் செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, அதன் நடவடிக்கைகளில் எந்த செல்வாக்கும் செலுத்தப்படாது என்றும் உறுதியளித்துள்ளார். (ஐ)

# 10 பொருட்களின் விலைகள் குறைப்பு



கொழும்பு, ஜன 23

10 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக லங்கா சதொச தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள அனைத்து லங்கா சதொச கடைகளிலும் இந்தப் பொருட்களை புதிய விலையில் புதன்கிழமை (22) முதல் வாங்கலாம் என்று சதொச மேலும் கூறுகிறது.

ரூ.1,095 ஆக இருந்த ஒரு கிலோ கிராம் உள்ளூர் முந்திரி பருப்பு (கஜு) ரூ.100 குறைந்து 995 ரூபாய்

ரூ.340 ஆக இருந்த ஒரு கிலோ கிராம் தும்புறு நிற சீனி ரூ.40 குறைந்து ரூ. 300 ஆகவும்,

ரூ.210 ஆக இருந்த இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கின் விலை 30 ரூபாவால் குறைக்கபட்டுள்ளது அதன் புதிய விலை 180 ரூபாயாகும்.

ரூ.795 ஆக இருந்த ஒரு கிலோ சிவப்பு பட்டாணி (சிவப்பு கௌபி) ரூ.30 குறைந்து ரூ.765 ஆகவும்,

ரூ.960 ஆக இருந்த ஒரு கிலோ கிராம் நெத்தலி ரூ.20 குறைந்து 940 ரூபாவாகவும் உள்ளது.

ரூ.845 ஆக இருந்த ஒரு கிலோ கிராம் காய்ந்த மிளகாய் ரூ.15 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலை 830 ரூபாவாகும், ஒரு கிலோவின் விலை ரூ. ரூ.655 ஆக இருந்த பாஸ்மதி அரிசியின் புதிய விலை ரூ.645 ஆக உயர்ந்தது.

655 ரூபாயாக இருந்த ஒரு கிலோ கிராம் பாஸ்மதி அரிசியின் விலை 10 ரூபாய் குறைக்கப்பட்டதன் மூலம், அதன் புதிய விலை 645 ரூபாயாக மாறியுள்ளது. 240 ரூபாயாக இருந்த இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் 10 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 230 ரூபாயாகும்.

290 ரூபாயாக இருந்த ஒரு கிலோ கிராம் பருப்பு 2 ரூபாவினால் குறைக்கப்பட்டு, புதிய விலை 288 ரூபாகும்.

242 ரூபாயாக இருந்த வெள்ளை சீனி ஒரு கிலோ கிராம் 2 ரூபாவால் குறைக்கப்பட்டு 240 ரூபாய்க்கும் விற்பனைச் செய்யப்படுகின்றது. (ஐ)

# தேங்காய் விலை ரூ.300ஆக அதிகரிக்கும் அபாயம்



கொழும்பு, ஜன 23

தேங்காய் சார்ந்த பொருட்கள் உட்பத்திக்கு குறைந்தபட்சம் 100 மில்லியன் தேங்காய்களை உடனடியாக இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், சந்தையில் ஒரு தேங்காயின் விலை 250 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக இலங்கை தென்னை கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் ஜயந்த சமரகோன் தெரிவித்தார்.

தேங்காய் சார்ந்த தொழில்துறை துறைக்கு தேங்காய் பால், உறைந்த தேங்காய் துருவல்கள் அல்லது துண்டாக்கப்பட்ட உலர்ந்த தேங்காய் ஆகியவற்றை அவசரமாக இறக்குமதி செய்ய வேண்டும் என்று அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும் கூறினார்.

மேலும், துண்டாக்கப்பட்ட உலர்ந்த தேங்காய்களைப் பயன்படுத்தி தேங்காய் எண்ணெய் தயாரிக்கலாம் என்றும் அவர் கூறினார். (ஐ)

# இன்றிரவு இடியுடன் கூடிய மழை

கொழும்பு, ஜன 23

டின் சில இடங்களில் இன்று மாலை அல்லது இரவில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அந்தவகையில், ஊவா மாகாணத்திலும் அம்பாறை, மட்டக்களப்பு, மாத்தளை, நுவரெலியா, ஹம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதேவேளை, வடமத்திய மாகாணங்களிலும், திருகோணமலை மாவட்டத்திலும் பல தடவைகள் மழை பெய்யக்கூடும் எனவும், வடக்கு மாகாணத்தில் சிறிதளவான மழை பெய்யக்கூடும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சில இடங்களில் 50 மில்லி மீற்றர் அளவில் ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# 56 பாரிய நீர்தேக்கங்கள் வான்பாய்கின்றன

கொழும்பு, ஜன 23

56 பாரிய நீர்தேக்கங்கள் தொடர்ந்து வான்பாய்வதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இராஜாங்கனை, சேனாநாயக்க சமுத்திரம், மின்னேரிய, பதவிய, கவுடுல்ல, லுனுகம்வேஹர உள்ளிட்ட நீர்தேக்கங்கள் இவ்வாறு வான்பாய கின்றன.

60 சிறிய குளங்களும் வான்பாய்வதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

மழையுடனான வானிலையால் மல்வத்து ஓயாவின் தந்திரிமலை பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

யான் ஓயா பெருக்கெடுத்ததால் ஹொரவப் பொத்தான பகுதியில் சிறியளவில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. (ஐ)

# இருதயபுரத்தில் விழுந்த கெப்



கொழும்பு, ஜன 23

மூதூர் பொலிஸ் பிரிவின் இருதயபுரம்(பச்சநூர்) பகுதி யில் உள்ள வாய்க்காலுக்குள் புரண்டு விழுந்து சிறிய ரக கெப் வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் புதன்கிழமை (22) காலை இடம் பெற்றுள்ளது. இவ்விபத்து சம்பவத்தில் வாகனத்தில் பயணித்தோர் சிறிய காயங்களுடன் தெய்வாதீனமான முறையில் உயிர் தப்பியுள்ளனர்.

மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை நோக்கி பயணித்த கெப் ரக வாகனமே இந்த விபத்தை எதிர்நோக்கியுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# மகா கும்பமேளா இடத்தில் மந்திரிசபை கூட்டத்தை நடத்துவதா? யோகி ஆதித்யநாத் அரசுக்கு அகிலேஷ் யாதவ் கண்டனம்!





உத்தரபிரதேச மாநிலம் பிரக்யாக்ராஜ் நகரில் மகா கும்பமேளா கடந்த 13-ஆம் திகதி தொடங்கியது. திரிவேணி சங்கமத்தில் முதல்-மந்திரி யோகி ஆதித்யநாத் தனது 54 மந்திரிகளுடன் கங்கையில் புனித நீராடினார். மகா கும்பமேளாவையொட்டி யோகி ஆதித்யநாத் தலைமையில் சிறப்பு மந்திரிசபை கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதற்கு சமாஜ்வாடி கட்சி தலைவரும், உ.பி.முன்னாள் மந்திரியுமான அகிலேஷ் யாதவ் கண்டனம் தெரிவித்து உள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

அரசியல் நிகழ்வுகளுக்கு கும்பமேளா சரியான இடம் அல்ல. அரசியல் செய்தியை வழங்க பா.ஜ.க. அரசு அங்கு மந்திரிசபை கூட்டத்தை நடத்துகிறது. உத்தரபிரதேசத்தில் பா.ஜ.க.வினர் மாபியாவாக செயல்படுகின்றனர். வக்பு நிலத்தை அபகரிப்பதே பா.ஜ.க. அரசின் நோக்கமாக இருக்கிறது. இவ்வாறு அகிலேஷ் யாதவ் கூறியுள்ளார்.

## பா.ஜ.க.வின் பிரசாரம் குறித்து ஆம் ஆத்மி கட்சியினர் காட்டம்!



பா.ஜ.க.வின் பிரச்சாரம் குறித்து ஆம் ஆத்மி கட்சியின் தேசிய செய்தி தொடர்பாளர் மீனாட்சி சர்மா காட்டம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு டெல்லியின் விஷ்வாஸ் நகர் சட்டசபை தொகுதியில் ஆம் ஆத்மி சார்பில் நேற்று பிரச்சாரக் கூட்டம் நடந்தது.

இதில் பங்கேற்ற அக்கட்சியின் தேசிய செய்தி தொடர்பாளர் மேலும் கூறுகையில் பா.ஜ.க.வில் உள்ள எந்தத் தலைவரும் அடிமட்ட அளவில் வேலை பார்க்கவில்லை. பா.ஜ.க.வில் உட்கட்சி பூசலால் முதல் மந்திரி வேட்பாளராக யாரும் அறிவிக்கப்படவில்லை. பா.ஜ.க.வின் தேர்தல் பிரச்சாரம் ஆனது ஒரு மாப்பிள்ளை இல்லாமல் திருமண ஊர்வலம் பே-ாவது போன்றது. ஆம் ஆத்மி கட்சியின் தேர்தல் அறிக்கையை பா.ஜ.க. நகலெடுத்துள்ளது என குற்றம்சாட்டினார்.

டெல்லி சட்டசபைக்கான தேர்தல் பெப்ரவரி 5-ஆம் திகதி நடைபெற உள்ளது. பெப்ரவரி 8ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்படும்.

இந்த தேர்தலில் ஆளும் ஆம் ஆத்மி, காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. என 3 முக்கிய கட்சிகள் மும்முனைப் போட்டியை ஏற்படுத்தியுள்ளன.

சட்டசபை தேர்தலை முன்னிட்டு அரசியல் கட்சிகள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

டெல்லியில் தற்போது ஆட்சி செய்து வரும் ஆம் ஆத்மி, இந்த முறையும் வெற்றி பெற்று ஹாட்ரிக் சாதனை படைக்கும் முனைப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



## காரில் செய்த சாகசத்தால் விபத்தில் சிக்கிய மாணவர்கள்!

சமூக வலைதள புகழுக்காக இளை-ஞர்கள் செய்யும் சாகசங்கள் சில நேரங்களில் அவர்களுக்கு ஆபத்தாகி விடுகிறது. தற்போது இணையத்தில் வைரலாகி வரும் ஒரு காணொளியில், மாணவர்கள் சிலர் குழுவாக சேர்ந்து விருந்து கொண்டாடும் காட்சிகள் உள்ளது.

அப்போது பரபரப்பான சாலையில் அந்த மாணவர்கள் காரில் செல்கின்றனர். கருப்பு நிற உடையணிந்து ஸ்டைலாக காட்சி அளிக்கும் அந்த மாணவர்கள் கார் மீது அமர்ந்து பயணித்தனர்.

கார் வேகமாக சென்று வலப்புறமாக திரும்பிய போது கார் மீது அமர்ந்-திருந்த 3 மாணவர்கள் கீழே விழுந்து காயம் அடைவது போன்று காட்சிகள் உள்ளது.

பின்னணியில் சிலர் சிரிக்கும் சத்தம் கேட்கிறது. ரீல்ஸ் காணொளிக்கு ஆசைப்பட்டு மாணவர்கள் விபத்தில் சிக்கியது போன்று தெரிகிறது. ரெடிட் தளத்தில் பகிரப்பட்ட இந்த காணொளி வைரலான நிலையில் பயனர்கள் பலரும் தங்களது விமர்சனங்களை பதிவிட்டு வருகின்றனர்.

# ஜல்கான் ரயில் விபத்தில் பலி எண்ணிக்கை 12 ஆக உயர்வு: பிரதமர் மோடி இரங்கல்!

ஜல்கான் ரயில் விபத்தில் பலியானோர் குடும்பத்-தினருக்கு பிரதமர் மோடி உட்பட உள்துறை மந்திரி அமித்ஷா, ரயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ், மகாராஷ்டிர முதல் மந்திரி தேவேந்திர பட்னாவிஸ், உத்தர பிரதேச முதல் மந்திரி யோகி ஆதித்யநாத் உள்பட பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உத்தர பிரதேச மாநிலம் லக்னோவில் இருந்து புறப்பட்ட புஷ்பக் எக்ஸ்பிரஸ் ரயில் மும்பை நோக்கி சென்று கொண்டிருந்தது.

மகாராஷ்டிர மாநிலம் ஜல்கான் மாவட்டத்தில் உள்ள பட்னேரா ரயில் நிலையம் அருகே ரயில் நேற்று மாலை வந்தபோது, பி4 ஏசி பெட்டியின் சக்கரங்களில் இருந்து தீப்பொறி பறந்தது. உடனடியாக அங்கிருந்த பயணி ஒருவர் அபாய சங்கிலியைப் பிடித்து இழுத்து ரயிலை நிறுத்தியதாகக் கூறப்படுகிறது.

ரயிலில் தீ விபத்து ஏற்பட்டதாக பரவிய வதந்தியால் அந்த ரயிலில் இருந்து மற்ற பயணிகள் அவசர அவசரமாக இறங்கினர். அவர்கள் அருகே இருந்த தண்டவாளத்தில் உடமைகளுடன் நின்றிருந்த நிலை



யில், எதிர்திசையில் அதிவேகமாக வந்த பெங்களூரு எக்ஸ்பிரஸ் தண்டவாளத்தில் இருந்தவர்கள் மீது மோதியது. இதில் 8 பேர் சம்பவ இடத்தியே உடல் துண்டாகியும், தூக்கி வீசப்பட்டும் பலியானதாக முதல் கட்ட தகவல் வெளியானது.

இந்நிலையில், ஜல்கான் ரயில் விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது.

புஷ்பக் எக்ஸ்பிரஸ் ரெயிலில் உள்ள 'ஹாட் ஆக்சில்' அல்லது 'பிரேக்-பைண்டிங்'காரணமாக தீப்பொறிகள் ஏற்பட்டதாக முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

ரயில் விபத்தில் பலியானோர் குடும்பத்தினருக்கு பிரதமர் மோடி வெளியிட்ட இரங்கல் செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது , மகாராஷ்டிர மாநிலம் ஜல்கானில் ரயில் தண்டவாளத்தில் நடந்த பயங்கர விபத்தால் வேதனை அடைந்தேன். பலியானோரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன், காயமடைந்த அனைவரும் விரைவில் குணமடைய பிரார்த்தி-க்கிறேன். பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அதிகாரிகள் செய்து வருகின்றனர் என தெரிவித்தார்.

இதனிடையே உயிரிழந்தவர்களுக்கு ரூ. 5 இலட்சம் இழப்பீடு வழங்குவதாக மராட்டிய முதல்-மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் அறிவித்துள்ளார்.



# ட்ரம்ப் சுவரின் வரலாறு!

## 175 வருடங்களாக தொடரும் பிரச்சனை

அமெரிக்காவின் 47 ஆவது அதிபராகப் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப் முதல் நாளிலேயே குடியேற்றம் முதல் காலநிலை மாற்றம் வரை ஏராளமான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார். இதில் கூடுதல் கவனம் பெற்ற செய்திகளில் ஒன்று குடியேற்றம்.

அதற்காக நாட்டின் தெற்கு எல்லைப் பகுதியில் அவசரநிலையைப் பிரகடனப்படுத்தும் உத்தரவிலும், சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் அமெரிக்காவில் பெற்றுக் கொள்ளும் குழந்தைகளுக்கு இயல்பாக



வழங்கப்படும் அமெரிக்கக் குடியுரிமைக்கு எதிராகவும், மறுகுடியமர்த்தல் திட்டத்தை நான்கு மாதங்களுக்கு நிறுத்தி வைக்கும் உத்தரவிலும் கையெழுத்திட்டிருக்கிறார்.

கையெழுத்திடும்போதே “இது பெரிய நடவடிக்கை” எனக் கூறி அதை முக்கியத்துவப்படுத்தியும் காண்பித்திருக்கிறார். அமெரிக்க எல்லையை மூடும்படி இராணுவத்துக்கு உத்தரவிட்டவர், ஹஹஇனி சட்டவிரோத போதைப்பொருள்கள் நாட்டுக்குள் நுழைவதையும், மனிதக் கடத்தல், எல்லை தாண்டிய குற்றங்கள் போன்றவற்றை இல்லாமலாக்க வேண்டும்” எனவும் குறிப்பிட்டிருக்கிறார். மேலும், தெற்கு எல்லைப்பகுதியில் கூடுதலாக சுவர் (ட்ரம்ப் சுவர்) அமைப்பதற்கான முயற்சிகளை மீண்டும் மேற்கொள்ளவும் உத்தரவிட்டிருக்கிறார். இப்படி சட்டவிரோத குடியேற்றத்துக்குத் தடைவிதிக்கும் அவரின் நடவடிக்கைகள் பெருமளவில் பேசுபொருளாகியிருக்கிறது. இதில் கூடுதல் கவனம் பெற்றது ‘ட்ரம்ப் சுவர்’. இந்த சுவருக்கென தனி வரலாறே இருக்கிறது.

டெக்ஸாசை அமெரிக்கா தன்னுடன் இணைத்துக கொண்டதற்கு எதிராக 1846 - 1848 வரை மெக்சிகோ அமெரிக்காவுடன் போரில் ஈடுபட்டது. இந்தப் போரில் அமெரிக்கா வெற்றிபெற்றது. அப்போது முதலே, அமெரிக்கா – மெக்சிகோ எல்லைப் பிரச்சனை தொடங்கியது. 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இந்த இருநாடுகளின் எல்லைகளும் ரோந்துப்பணிகள்கூட இன்றி திறந்திருந்தது. 1910 இல் நடந்த மெக்சிகன் புரட்சி, முதலாம் உலகப் போர் உள்ளிட்ட காரணங்களால் அமெரிக்காவுக்கும் – மெக்சிகோவுக்கும் இடையே மீண்டும் பதற்றம் தொடங்கியது. அப்போதுதான் ஆயுதக் கடத்தல், அகதிகள் பிரச்னை, உளவுத்துறை சிக்கல்கள் போன்ற காரணங்களுக்காக எல்லைப் பகுதிகளில் இருநாடுகளும் ரோந்துப்பணிக்கான காவலர்களை நியமித்திருக்கின்றன. அதே காலகட்டத்தில்தான் அமெரிக்கா - மெக்சிகோவுக்கு நடுவில் இருக்கும் ஆறை இணைக்கும் டீசழறளளஎடைடந ரூ ஆயவயஅழசழள பாலம் கட்டப்பட்டு செயற்பாட்டுக்கும் வந்தது.

அதுவரை எந்தத் தடுப்பும் இல்லாமல் இருந்த நிலையில், 1909 - 1911 க்கு மத்தியில் கால்நடைகள் எல்லைத்தாண்டுவதைத் தடுக்க, இரு நாட்டுக்கு மத்தியில் முதன்முதலாக ஆம்போஸ் நோகேல்ஸில் பகுதியில் முள்வேலி அமைக்கப்பட்டது. ஆனால் அந்த முள் வேலி 1929 இல் மனித நடமாட்டத்தைத் தடுக்கும் 6 அடி உயரச் சங்கிலி – இணைப்பு வேலியாக மாற்றப்பட்டது. அது அப்படியே காலப்போக்கில் 6 அடி முள்வேலியாக உருமாறியது.

இரண்டாம் உலகப்போர் (1939 - 1945) நடந்த 1940, 1950 களில் மெக்சிகோ – அமெரிக்காவின் மக்கள் கணிசமான எண்ணிக்கையில் இடம்பெயரத் தொடங்கனர். இந்த தருணத்தில், மெக்சிகோவும், அமெரிக்காவும் எல்லை ஊடுருவலை ஏற்றுக்கொண்டன. இரண்டாம் உலகப் போரின் போது ஏற்பட்ட தொழிலாளர் பற்றாக்குறை போன்ற சிக்கல்களைக் களைய, பிரேசரோ திட்டம் என அழைக்கப்படும் ‘தொழிலாளி விருந்தினர் திட்டம்’ கொண்டுவரப்பட்டது. இந்த திட்டத்தை இருநாடுகளும் ஏற்றுக்கொண்டன. நாட்டுக்குள் வரும் அனைவரும் இந்த திட்டத்துக்குத் தகுதி பெறவில்லை என்றாலும், இதைக் காரணமாக வைத்து ஆயிரக்கணக்கானோர் சுதந்திரமாக இடம்பெயரத் தொடங்கினர்.

பிரேசரோ திட்டம் 1964 இல் முடிவடைந்தது. எனவே, மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற அழுத்தம் இருநாடுகளுக்கும் ஏற்பட்டது. அதற்காக அப்போதைய அமெரிக்காவின் ரூஸ்வெல்ட் அரசு நகர்ப்புறங்களில் வேலி அமைக்கத் திட்டமிட்டது. அதற்கு அடுத்த வருடம் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த துணைக் குடியரசுத் தலைவர் லிண்டன் பி. ஜோன்சன் குடிவரவு மற்றும் குடியுரிமைச் சட்டத்தில் கையெழுத்திட்டார். இதுதான் அமெரிக்காவின் முதல் குடியுரிமைச் சட்டமாகும். இதன்மூலம் அமெரிக்காவிற்குக் குடிபெயரும் நபர்களின் எண்ணிக்கை வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர்கள் ரிச்சர்ட் நிக்சன் (1969 - 1974) தொடங்கி ஜோர்ஜ் உறு புஷ், பில் கிளின்டன் எனத் தொடர்ந்து இந்தத் தடுப்பு, முள்வேலிகளை அமைத்தும், கண்காணித்தும் வந்தனர்.

மெக்சிகோவிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் அதிகளவில் அமெரிக்காவுக்குள் நுழைவதாகவும், போதைப்பொருள்கள் அதிகம் அமெரிக்காவுக்குள் கடத்திவரப்படுவதாகவும் அப்போதைய பாரக் ஒபாமா அரசு (2012 - 2016) மீது தொடர் குற்றச்சாட்டுகள் எழுந்தது. 2016 ஆம் ஆண்டு இதை அரசியல் ஓட்டாக மாற்றும் யுக்தியைக் கையில் எடுத்தார் டொனால்ட் ட்ரம்ப். அதிபர் வேட்பாளரான அவர், அப்போதைய தேர்தல் பிரசாரங்களில், ‘நான் அதிபரானால், அமெரிக்கா - மெக்சிகோ எல்லையில் ஒரு பெரும் தடுப்புச் சுவர் அமைப்பேன். புலம்பெயர்பவர்களைக் கட்டுக்குள் கொண்டுவருவேன்’ எனத் தீவிரப் பிரசாரம் மேற்கொண்டார். தேர்தலின் போதே இது கடுமையாக விமர்சிக்கப்பட்டது. ஆனாலும் அவர்தான் ஆட்சியை வென்று அமெரிக்க அதிபரானார்.

2017 இல் ஆட்சிப் பொறுப்பேற்ற ட்ரம்ப், அமெரிக்கா – மெக்சிகோ எல்லை சுவருக்கு 12 பில்லியன் டொலர்கள் செலவாகும் எனத் திட்டமிட்டு நிதி ஒதுக்கினார். ஆனால் மொத்த மதிப்பீடுகள் 300 பில்லியன் டொலர்களாகக் குறிக்கப்பட்டது. அதேநேரம், பல ஆண்டுகளாக ஜார்ஜ் உறு புஷ்/ம், பாரக் ஒபாமாவும் கட்டிக் காத்துவந்த மெக்சிகோவின் உறவை டொனால்ட் ட்ரம்ப்பின் இந்த சுவர் அமைக்கும் திட்டம் பெரும் ஆபத்தில் ஆழ்த்தியது. மேலும், ஹஹஇந்தச் சுவர் வனவிலங்குகளுக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. பல அழிந்து வரும் உயிரினங்களும், அவற்றின் வாழ்விடங்களும் கபளீகரம் செய்யப்படுகின்றன.

காடுகளின் உற்பத்தி போன்ற பல இயற்கை சூழல்கள் சீர்குலைக்கப்டுகிறது” எனச் சூழலியல் ஆர்வலர்கள், எதிர்க்கட்சிகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. இந்தச் சுவர் கட்டுமானத்துக்கான நிதியுதவியும் பல வழக்குகளுக்கு இலக்காகியது. இத்தனை விமர்சனங்களையும், எதிர்ப்புகளையும் தாண்டி, அவரது முந்தைய ஆட்சிக் காலத்தில் தெற்கு எல்லையில் தடுப்புச் சுவர் பணிகள் தொடங்கி நடந்து வந்தது.

ட்ரம்ப் அரசுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த பைடன் அரசு, இந்தச் சுவர் கட்டுமானப் பணிகளை நிறுத்தியது. அப்போதுவரை எவ்வளவு நீளச் சுவர் அமைக்கப்பட்டது என்ற கேள்விகள் எழுந்தன. அமெரிக்க சுங்கம் மற்றும் எல்லைப் பாதுகாப்பு அமைப்புகள் வழங்கிய இறுதிப் புள்ளிவிவர அறிக்கையின்படி, ட்ரம்ப் சுவர் 458 மைல்கள் அமைக்கப்பட்டிருந்ததாகச் செய்திகளில் தகவல் வெளியானது.

பைடன் அரசு இடை நிறுத்தத்தால் முழுமையாக முடியாத இந்த சுவர் அமைக்கும் பணியை, தற்போது ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கும் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் தொடங்க உத்தரவிட்டிருக்கிறார். ஆனால் அதற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான எந்த திட்டத்தையும் இன்னும் வகுக்கவில்லை எனக் கூறப்படுகிறது. 179 ஆண்டுகளாக தொடரும் இந்த அரசியல் பிரச்சனைக்கு மத்தியில், பெரும் சிக்கல்களுக்கு பலியாவது என்னவோ இருநாட்டு மக்கள்தான்.

# அமெரிக்கா-மெக்சிகோ எல்லையில் இராணுவ வீரர்கள் குவிப்பு!





சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்க அமெரிக்கா-மெக்சிகோ எல்லையில் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்று டிரம்ப் அறிவித்தார்.

இந்த நிலையில் அமெரிக்கா-மெக்சிகோ எல்லைக்கு கூடுதலாக 1000 இராணுவ வீரர்களும், 500 கடற்படையினரையும் அனுப்ப தொடங்கியுள்ளதாக பென்டகன் தெரிவித்துள்ளது.

இவர்கள் ஏற்கனவே பணியில் உள்ள 2500 வீரர்களுடன் இணைந்து எல்லையில் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுவார்கள்.

மேலும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தடுத்து வைக்கப்பட்டுள்ள புலம்பெயர்ந்தோரை நாடு கடத்துவதற்கான உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையின் விமானங்களுக்கு உதவ இராணுவ விமானங்கள், ஹெலிகாப்டர்கள் அனுப்பப்படுகின்றன.



## அமெரிக்காவில் சட்டவிரோதமான குடியேற்ற வாசிகளை தீவிரவாதிகள் என குறிப்பிட்ட டிரம்ப்!

அமெரிக்காவில் சட்ட விரோதமான குடியேற்வாதிகளை தீவிரவாதிகள் என டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற டிரம்ப் சமீபத்தில் பதவி யேற்றார். அவர் பதவி யேற்றவுடன் பல்வேறு அதிரடி உத்தரவுகளில் கையெ முத்திட்டார். குறிப்பாக சட்ட விரோத குடியேற்றத்தை தடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் தனியார் ஊடகத்திற்கு டிரம்ப் பேட்டி அளித்தபோது அவரிடம் சட்ட விரோதமாக குடியேறியவர்கள் குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கே டிரம்ப் இவ்வாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் , ஹநமது நாட்டில் ஆயிரக்கணக்கான பயங்க ரவாதிகள் உள்ளனர். இந்த பிரச்சினையை நாங்கள் கவ னித்துக் கொள்வோம்' என்றார்.

மேலும் , ஹஜனநாயகக் கட்சியினரால் ஆட்சி செய்ய முடியாது என்பதையும், அவர்களின் கொள்கைகள் பயங்கரமானவை என்பதையும் மக்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

குத்துச்சண்டை வளையத்தில் ஒரு பெண் ஒரு ஆணால் தாக் கப்படுவதை அவர்கள் பார்க்க விரும்பவில்லை. ஒரு குழந்தை ஒரு பையனாக வீட்டை விட்டு வெளியேறி 2 நாட்களுக்குப் பிறகு ஒரு பெண்ணாக திரும்பி வருவதை அவர்கள் விரும்பவில்லை. ஆனால் அது நடக்கக் கூடிய மாகாணங்களும் உள்ளன.

முன்னாள் அதிபர் ஜோ பைடன் பலருக்கும் பொது மன்னிப்பு வழங்கினார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தனக்குதானே மன்னிப்பு வழங்கவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.



## 179 பேரின் உயிரை குடித்த கான்கிரீட் சுவர் அகற்றம்

தென் கொரியாவில் விமான விபத்தில் 179 பேரின் உயிரை குடித்த கான்கிரீட் சுவர் அகற்றம்

தாய்லாந்து தலைநகர் பாங்காங்கில் இருந்து கடந்த 29-ந்தேதி தென்கொரியாவின் முவான் நகருக்கு விமானம் ஒன்று இயக்கப்பட்டது.

விமான சிப்பந்திகள் உள்பட 181 பேருடன் சென்ற இந்த விமானம் முவான் விமான நிலையத்தில் தரை யிறங்க முயன்றபோது லேண்டிங் கியரில் கோளாறு ஏற்பட்டது.

இதனால் ஓடுதளத்தில் உரசியவாறு அங்கே [illegible] கமாக மோதியது. மோதிய வேகத்தில் அந்த விமானம் தீப்பிடித்து கருகி எரிந்தது. இந்த விபத்தில் 179 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். 2 பேர் மட்டும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். இந்த கோர விபத்து தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

விமான விபத்துக்கு விமான நிலையத்தை சுற்றி அமைக்கப்பட்டுள்ள கான்கிரீட் சுவரும் காரணம் என தெரிய வந்தது. இதனை தொடர்ந்து 179 பேரை உயிரை குடித்த அந்த சுவரை உடனடியாக [illegible]



## அமெரிக்காவில் கடும் பனிப்புயல் உயிரிழப்பு 13 ஆக உயர்வு!

அமெரிக்காவில் கடந்த சில நாட்களாக வீசிவரும் பனிப்புயல் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக உயர்வடைந்துள்ளது.

அமெரிக்காவில் மேற்கு கரையோரத்தில் அமைந்துள்ள கலிபோர்னியா மாகாணத்தில் இந்த மாதம் தொடக்கம் முதல் காட்டுத்தீ பரவியது. கடுமையான காற்றுவீச்சு காரணமாக கடந்த 2 வாரங்களுக்கு மேலாக தொடர்ந்து பரவி வரும் காட்டுத்தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் போராடி வருகிறார்கள்.

அமெரிக்காவின் தெற்கு மாகணங்களான புளோரிடா, மிசிசிப்பி, லூசியானா உள்ளிட்டவற்றில் புத்தாண்டு தொடங்கி கடுமையாக பனி பொழிந்து வருகிறது. இயற்கை அன்னையின் இந்த முரணபாடான தாக்குதலில் இருந்து மீள முடியாமல் அமெரிக்கா திணறி வருகிறது. இந்தநிலையில் புளோரிடா மாகாணத்தில் கடந்த 2 நாட்களாக வரலாறு காணாத அளவில் கடும் பனிப்பயுல் வீசி வருகிறது.

மைனஸ் 20 டிகிரி வானிலையுடன் கடுமையான பனிப்புயல் காரணமாக அங்குள்ள முக்கிய நகரங்களை வெள்ளை பனி மூடியது. குறிப்பாக புளோரிடாவில் உள்ள மில்டன் நகரம் துருவ கண்டம்போல காட்சியளிக்கும் வகையில் பனிபொழிந்து வருகிறது. அங்கு 23 செ.மீட்டர் அளவில் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இது கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவு கொண்டதுஎன அந்த நாட்டின் வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் புளோரிடா, மிசிசிப்பி, லூசியானா உள்ளிட்ட மாகாணங்களில் உள்ள நகரங்களில் 20 செ.மீட்டருக்கும் அதிகமாக பனிப்பொழிவு பதிவாகி உள்ளதாக அந்த நாட்டின் வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புளோரிடா, லூசியானா மாகணங்கள் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

இதனால் அந்த நாட்டின் பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டன, சாலை மற்றும் ரெயில் போக்குவரத்து பொதுசேவை குறைக்கப்பட்டது. ஹவுஸ்டன், கூல்ப் போர்ட், டல்லாயாசி, மொபில் உள்ளிட்ட நகரங்களில் உள்ள விமான நிலையங்கள் மூடப்பட்டன.

இதனால் 2 ஆயிரம் விமானங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. அமெரிக்காவில் பனிப்புயல் காரணமாக ஏற்பட்ட விபத்துகளில் சிக்கி 13 பேர் பலியாகினர். 3 கோடி மக்களின் இயல்பு வாழ்க்கை [illegible]

## பெருந்தோட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் சம்பளத்தையும் அதிக ரிக்க வேண்டும்.

ஏனெனில் எமது மக்கள் இன்றும் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்-துள்ளார்கள். தினசரி சம்பளத்தை 2000 ரூபாவாக அதிகரிக்க வேண்டும்."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற கிளின் ஸ்ரீலங்கா செயற்றிட்டம் மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

"நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வில் பிரதமர் ஹறிணி அமரசூரிய உரையாற்றுகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் குறிப்பிட்ட விடயங்களுக்குப் பதிலளித்துக் கொண்டிருந்தார்.

அப்போது சபைக்குத் தலைமை தாங்கியவரின் அனுமதியுடன், நான் பிரதமரை நோக்கிக் கடந்த கால அரசைப் போல் இல்லாமல் கிளின் ஸ்ரீ லங்கா செயற்றிட்டத்தின் எண்ணக்கருவை எடுத்துரைக்குமாறு குறிப்பிட்டேன்.

இதற்குப் பிரதமர் நாடாளுமன்றத்தில் எவ்வாறு உரையாற்ற வேண்டும் என்று எனக்குக் கற்பிக்க வேண்டாம் என்று ஆவேசமாகக் குறிப்பிட்டார். பிரதமர் வழங்கிய பதில் முறையற்றது. பிரதமருக்குக் கற்பிக்க வேண்டிய அவசியம் எனக்குக் கிடையாது. அதற்கான நேரமும் எனக்கில்லை.

எதிர்க்கட்சியினரின் செயற்பாடுகள் கவலைக்குரியவை என்று பிரதமர் குறிப்பிட்டார். உண்மையில் அரசின் செயற்பாடுகள் எமக்கும் கவலைதான் அளிக்கின்றது. பிரதமரின் கோபம் மற்றும் ஆத்திரத்தை எம்மால் விளங்கிக்கொள்ள முடியும். கிளின் ஸ்ரீலங்கா செயற்றிட்டம் மற்றும் அதன் எண்ணக்கரு சிறந்தது . சிங்கப்பூர் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இந்தத் திட்டம் காணப்படுகின்றது. ஆகவே, சிறந்த திட்டங்களுக்க நாங்கள் என்றும் ஆதரவு வழங்குவோம்.

பெருந்தோட்ட மக்களையே நான் என்றும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன். எமது மக்கள் பல பிரச்சினைகளுக்கும், உரிமை மறுப்புக்கும் இன்றும் முகங கொடுத்துள்ளார்கள். கடந்த நாடாளுமன்ற அமர்வின்போது பெருந்தோட்ட மக்களின் நாள் சம்பளம் 2000 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டேன். இதற்கு ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் அவசரப்பட வேண்டாம் என்று குறிப்பிட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச சேவையாளர்களின் சம்பளத்தை அதிகரித்தால் பெருந்தோட்ட மக்களின் சம்பளத்தையும் அதிகரிக்க வேண்டும். ஏனெனில் எமது மக்கள் இன்றும் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளார்கள்." - என்றார்.

## வழங்கிய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றம் என்று கூறி வந்த இந்த அரசு, வாக்களித்த மக்களை ஏமாற்றி வருகின்றது. தேர்தல் காலங்களில் தாம் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் போலியானவை என்பதை அநுர அரசு தற்போது நிரூபித்து வருகின்றது. இந்த அரசு பாதை தவறிப் பயணிக்கின்றது என்பதே உண்மை. பாதை தவறிப் பயணித்த கோட்டா அரசுக்கு இறுதியில் என்ன நடந்தது என்பதை அநுர அரசு நினைவில்கொள்ள வேண்டும்." - என்றார்.

## சாணக்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு தொடர்பில் இன்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கல்கிஸை மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலையாகினார். அவரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆஜரானார்.

வழக்குத் தாக்கல் செய்த சிவனேசதுரை சந்திரகாந்தன் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இதன்போது, எதிர்மறை தரப்பின் சட்ட நுண்ணறிவாளர் சுமந்திரன், இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள இந்த நீதிமன்றத்துக்கு உடைமையாக்கும் அதிகாரம் இல்லை என வாதத்தை முன்வைத்தார்.

வழக்கு விசாரணைக்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் கோப்புக்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால், வழக்குத் தாக்கல் செய்த சிவனேசதுரை சந்திரகாந்தன் வழக்குச் செலவினமாக எதிர்த்தரப்புக்கு 50 ஆயிரம் ரூபாவை வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், இவ்வழக்கின் அடுத்த வழக்கு விசாரணை ஏப்ரல் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சுமந்திரன், இந்த விவகாரம் தொடர்பாக தனது கருத்துகளை ஊடகங்களுக்கு விளக்கமாக வெளியிட்டார்.

## ஆவரங்காலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந் துள்ள நிலையில் மற்றுமொரு இளைஞர் படுகாயமடைந்த

நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த உதயகுமார் விதுஷன் (வயது 32) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார். கரவெட்டியைச் சேர்ந்த தேவமனோகரன் பிரணவன் (வயது 23) எனும் இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி மோட்டார்சைக்கிள் பயணித்த இளைஞர், வீதியில் மாடுகளைச் சாய்த்துச் சென்ற இளைஞருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார். விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரும், மாடுகளை சாய்த்துச் சென்ற இளைஞரும் படுகா யமடைந்த நிலையில், வீதியில் சென்றவர்கள் இருவரையும் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

எனினும், மாடுகளைச் சாய்த்துச் சென்ற இளைஞர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஓட்டியான இளைஞர் தொடர்ந்தும் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## படசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பாடசாலையில் வைத்து மாணவியை 52 வயதான ஆசிரியர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கினார் எனப் கோப்பாய் பொலிஸா ருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், ஆசிரியரை நேற்று கைது செய்துள்ள பொலிஸார், மாணவியை மருத்துவப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

விசாரணைகளைத் தொடர்ந்து ஆசிரியரை யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## புலமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுபேறுகள் இன்று மாலை வெளியிடப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

www.doenets.lk என்ற இணையத்தளத்தில் பெறுபேறுகளைப் பார்வையிடலாம் என்றும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது

## நான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"64 நாட்கள் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்குக் கதைப்பதற்கு இடம் கொடுக்காவிட்டால் அது இந்த அரசாங்கத்தினுடைய வெட்கம் கெட்ட செயல்.

ஏன் இவர்கள் பயப்படுகின்றார்கள். எனக்குக் கதைப்பதற்குரிய நேரத்தை வழங்கவில்லை என்று கேட்டால் அதற்கு ஒரு குழுவினை நியமித்துள்ளனர். நான் பல நாட்கள் காத்திருந்துள்ளேன். இது எந்த வகையில் நியாயம்?

இன்றில் இருந்து இந்த அரசாங்கத்திற்கு எனது மனதால் நான் கொடுக்கின்ற அனைத்து ஆதரவுகளையும் மீளப் பெறுக்கொள்கின்றேன். இன்றில் இருந்து உண்மையான எதிர்க்கட்சியாக நான் செயற்படுவேன்.

எனக்கு எதிராக 24 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வாகனத்தின் முன் விளக்குகளை ஒளிரவிட்டதற்காகக் கைது செய்கின்றார்கள். ஒரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தால் இது நடக்குமா? இந்த விடயத்தை நான் பாரிய கவலையுடன் முன்வைக்கின்றேன்.

மிகப் பெரிய எதிர்பார்ப்பு இந்தத் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் மீது இருந்தது. யாழ்ப்பாணம் மக்கள் பாரிய எதிர்பார்ப்பில் தேசிய மக்கள் சக்தியில் மூன்று எம்.பிக்களைத் தெரிவு செய்திருக்கின்றார்கள். ஆனால், சுயேச்சைக் குழுவிலிருந்து தெரிவான எனக்கு இங்கு கதைப்பதற்குக் கூட நேரம் கொடுக்கப்படுவதில்லை.

இங்கு தமிழ், சிங்கள மக்கள் ஒன்றாக வாழ வேண்டும் என்றால் உயரிய சபையான நாடாளுமன்றத்தில் உண்மையான விடயங்களைக் கதைபதற்கு நேரம் ஒதுக்கப்பட வேண்டும். ஏன் இந்த அரசாங்கம் ஒரு சுயேச்சைக் குழு உறுப்பினரைப் பார்த்துப் பயப்படுகின்றது. இந்த அரசாங்கத்திற்கு முதுகெழும்பு இருந்தால் இன்றில் இருந்து இந்தப் பிரச்சினையை முடித்துக் காட்டுங்கள்.

1980ஆம் ஆண்டுகளில் எவ்வளவு மக்களை ஆட்சிக்கு வந்துள்ள இந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் கொலை செய்துள்ளார்கள். பல படுகொலைகளைச் செய்த தரப்பு இது. முடிந்தால் என்னையும் கொலை செய்து விடுங்கள்.

போரின்போது இலட்சக்கணக்கான எமது மக்கள் முள்ளிவாய்க்காலில் வைத்து கொலை செய்யப்பட்டுள்ளார்கள்." - என்றார்.

இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு நேரம் வழங்காமை பிழையான விடயம் எனவும், நேரம் வழங்காமைக்கு எதிர்க்கட்சியே பொறுப்பு எனவும், அவருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது எனவும் சபை முதல்வரான அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அர்ச்சுனாவின் சிறப்புரிமை பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் எனவும், அவரைக் கைது செய்வதாக இருந்தால் சபாநாயகருக்கு அறிவிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார்.

# வவுனியாவில் மழையால் பாதிப்படைந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குங்கள்

## மாவட்ட அரச அதிபர் உத்தரவு







வவுனியா , ஜன 23

தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் இடம்பெயர்ந்து தற்காலிக முகாமில் தங்கியுள்ள 19 குடும்பங்களைச் சேர்ந்த 67 பேருக்கு நிவாரணம் வழங்க உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு வவுனியா மாவட்ட செயலாளர் பீ.ஏ.சரத்சந்திர, அதிகாரிகளுக்கு இன்று அறிவுறுத்தியுள்ளார்.

செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பீடியா பண்ணை கிராமம் வவுனியாவிலிருந்து சுமார் நாற்பது கிலோமீற்றர் தொலைவில் மிகவும் கடினமான சூழலில் அமைந்துள்ள கிராமமாகும்.

செட்டிகுளம் - மன்னார் பிரதான சாலையிலிருந்து ஆறு கிலோமீற்றர் தொலைவில் காட்டுப் பாதையில் அமைந்துள்ள இந்தக் கிராமத்தில் பாதுகாப்பான மையத்தை அமைக்கக் கூட ஒரு நிரந்தரக் கட்டடம் இல்லை.

மிகவும் கடினமான வாழ்க்கையை வாழ்ந்து வந்த இந்தக் குடும்பங்கள் வெள்ளத்தால் இடம்பெயர்ந்தனர். உழவு இயந்திரம் மற்றும் பாரவூர்திகளை பயன்படுத்தி அதற்குள் தங்கியிருக்கின்றனர்.

குறித்த பிரதேசத்துக்கு நேரில் சென்று பார்வையிட்ட மாவட்ட அரச அதிபர், இந்த மக்களுக்குச் சமைத்த உணவு மற்றும் தங்குமிடத்தை வழங்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.01.2025 இல் வெளியிடப்பெற்றது.

# மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் அரச சேவையை உருவாக்க வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து















"ஜனாதிபதியின் எண்ணக்கருவில் முன்னெடுக்கப்படும் 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு முக்கிய பங்கிருக்கின்றது. அதைச் சிறப்பாகச் செயற்படுத்த வேண்டும். மக்கள் நம்பிக்கை வைக்கும் அரச சேவையை உருவாக்க வேண்டும்." - என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

"உள்ளூராட்சி மன்றங்கள் பெற்றுக்கொள்ளும் வருமானங்களைத் தமது பிரதேச மக்களின் வாழ்வாதார உள்ளிட்ட ஏனைய மேம்பாடுகளுக்குச் செலவு செய்யவேண்டும். அதைவிடுத்து அதனை நிரந்தர வைப்பிலிட்டு சேர்த்து வைத்துக்கொண்டிருக்கக் கூடாது." - என்றும் அவர் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பருத்தித்துறை பொது மரக்கறிச் சந்தை இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 45 மில்லியன் ரூபா செலவில் இந்தச் சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் செயலர் திருமதி தாரணி கஜரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், "ஒதுக்கப்படும் நிதியை உரிய காலத்தில் செலவு செய்து முடிப்பதென்பது எமக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கின்றது. ஆனால், இந்தக் கட்டடத்தை மிக நேர்த்தியாக உரிய காலத்தில் நிறைவேற்றிய ஒப்பந்தக்காரருக்கு நன்றி." - என்று தெரிவித்தார். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் நா.வேதநாயகன் தனது உரையில்,

"பௌதீக வளங்களின் முன்னேற்றம் என்பது அபிவிருத்திக்கு இன்றியமையாதது. அதேபோன்று தனித்து பௌதீக வளங்களின் முன்னேற்றம் மாத்திரமும் அபிவிருத்தியாகிவிடாது. எங்களின் சேவையை மேம்படுத்தும்போதுதான் அபிவிருத்தி முழுமையடையும். எனவே, மக்களுக்குத் தரமான, அன்பான, விரைவான சேவையை வழங்க முன்வரவேண்டும்.

தற்போது எமக்குள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நகர சபையின் செயலர் ஆகியோர் இளையவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் உத்வேகத்துடனும் துடிப்புடனும் செயலாற்றுகின்றனர். இந்தப் பொதுச் சந்தைக்குரிய காணியைக் கொள்வனவு செய்து கட்டடம் அமைத்து இன்று மக்களுக்குக் கையளிக்கின்ற சபையின் செயலரையும் பணியாளர்களையும் பாராட்டுகின்றேன். இதேபோன்று திறம்பட பணியாற்றுவதுடன் எதிர்காலத்தில் இந்தப் பொதுச் சந்தையை பராமரிப்பதிலும்தான் இதன் வெற்றி தங்கியிருக்கின்றது." - என்றார்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் சி.சத்தியசீலன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, யாழ். மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பொ.ஸ்ரீவர்ணன், பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் நகர பிதா யோ.இருதயராஜா, பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அ.சா.அரியகுமார், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க மற்றும் வர்த்தகர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.